# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු








Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 09.07.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 191 பக்கங்கள் : 12


# அரச ஊழியருக்கு இவ்வருடம் சம்பள அதிகரிப்பு கிடையாது!

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 09

**தற்போதுள்ள பாதீட்டின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் ஊடாக இந்த வருடம் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை வழங்க முடியாதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

தற்போது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள அரச சேவை தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அரச சேவையில் நிலவும் வேதன முரண்பாடு

11

# அநீதியான போராட்டங்கள் மூலம் மக்கள் நிம்மதியை குலைக்காதீர்!

## எதிர்க்கட்சிகளை கடிந்துகொள்கிறது அரசு

கொழும்பு, ஜூலை 09

தேர்தல் நெருங்கும் நேரத்தில் அநீதியான வகையில் வேலைநிறுத்தங்களை முன்னெடுப்பதன் மூலம் பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துள்ளனர் என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இந்த வேலைநிறுத்தங்கள் மற்றும் போராட்டங்கள் மூலம் மக்களின் நிம்மதியான வாழ்க்கை நிலையை சீர்குலைப்பது தான் நோக்கமா என்ற கேள்விக்கு எதிர்க்கட்சிகள் பதில் அளிக்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022 ஆம் ஆண்டிலிருந்து, நமது அமைச்சினால் பாரிய அளவில் பல்வேறு கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள்

11

# ஜனாதிபதி பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் மட்டுமே!

## உயர்நீதிமன்றுக்கு அறிவித்தது சட்டமா அதிபர் திணைக்களம்

கொழும்பு, ஜூலை 09

அரசமைப்பின் பிரகாரம், ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்களேயாகும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் உயர்நீதிமன்றத்துக்கு நேற்று தெரியப்படுத்தியுள்ளது.

சட்டமா அதிபர் சார்பில் உயர்நீதிமன்றில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஸ்க டிசில்வா இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

அத்துடன், குறித்த மனுவை தள்ளுபடி செய்யக் கோரி ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடையும் காலப்பகுதி தொடர்பில் விளக்கமளிக்கும் வரை, ஜனாதிபதித் தேர்தலில் நடத்துவதைத் தடுக்க உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு உயர் நீதிமன்றத்தினால் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, பிரித்தி பத்மன் சூரசேன மற்றும் துரைராஜா ஆகியோர் அடங்கிய 5 பேர் கொண்ட நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனு விசாரிக்கப்பட்டது.

தொழிலதிபர் சி.டி. லெனவவினால் கடந்த புதன்கிழமை இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. குறித்த மனுவில் அரசியலமைப்பின் பிரகாரம்

11

# ரணிலுடன் பயணிக்க முடியாது!

## சாகரவின் அறிவிப்பால் குழப்பம்

கொழும்பு, ஜூலை 09


ஜனாதிபதியுடனான அரசியல் கூட்டணியை பொதுஜன பெரமுன நிராகரிப்பதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக பொதுஜன பெரமுன கட்சிக்கு எந்த வகையிலும் அறிவிக்கவில்லை.

11

# சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார் அத்தியட்சகர் அர்ச்சுனா!



யாழ்ப்பாணம், ஜூலை 09

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா வைத்தியசாலை விடுதியில் இருந்து நேற்று வெளியேறினார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகரை, சாவகச்சேரி வைத்தியசாலையில் இருந்து இடமாற்றும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து,

அதேவேளை, வைத்தியரை இடமாற்றும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்தியசாலை முன்பாக நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று திங்கட்கிழமை அதிகளவிலான மக்களின் பங்கேற்புடன் நண்பகல் வரை

11

# ஜனாதிபதித் தேர்தலுக்கு தடை கோரிய மனு விசாரணையின்றி நேற்று தள்ளுபடி!

கொழும்பு, ஜூலை 09

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடியும் காலப்பகுதி தொடர்பில் உயர்நீதிமன்றம் பொருள்கோடல் வழங்கும்வரை, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு, விசாரணையின்றி உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் ஐவரடங்கிய நீதியரசர் குழாமினால் குறித்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடையும் திகதி தொடர்பில் உயர் நீதி மன்றத்திடம் சட்ட வியாக்கியானம் கோரி தொழிலதிபர் ஒருவரால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த மனுவுக்கு எதிராக இடையீட்டு

11

# மேலும் 14 துறைகளுக்கு வரி!

கொழும்பு, ஜூலை 09

இதுவரை கவனம் செலுத்தாத 14 துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவற்றிலிருந்து வரி அறவீடு செய்யவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

கேகாலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

வரியை செலுத்தாமல் இருக்க எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும், வரி செலுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்ட காலம் இதுபோன்று இதுவரை இருந்ததில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு, 14 துறைகள் வரி செலுத்துவதற்காக கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என நாம் கொண்டு வந்தோம். பாரிய அளவிலான மேலதிக வகுப்புகள், தனியார் பாடசாலைகள், தனியார் மருத்துவ சேவைகள், பொறியியல் சேவைகள், நில

11

# மூடப்பட்ட ஏ-9 வீதி!



யாழ்ப்பாணம், ஜூலை 09

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் ஏ-9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதால் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதன்போது ஏ-9 வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

வீதியை மறித்து போராடுவது சட்டவிரோதமானது என பொலிஸார் அறிவித்தல் விடுத்தமைக்கு இணங்க,

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன அரசின் பொருத்து வீட்டுத் திட்டம் வடக்கு-கிழக்கு மீனவருக்கு வேண்டாம்

## கடற்றொழிலாளர் அமைப்பு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 09

சீன அரசின் பொருத்து வீட்டு திட்டம் வடக்கு கிழக்கு மீனவர்களுக்கு வேண்டாம் என வும் நிரந்தர வீட்டு திட்டத்தினை மீனவர்களுக்கு வழங்குமாறும் யாழ் சுழிபுரம் அலைமகள் கடற்றொழிலாளர் கிராமிய கூட்டுறவு அமைப்பின் சிரே ஷ்ட உறுப்பினர் கனகசபை ரவீந்திரன் கோரிக்கை விடுத் துள்ளார்

சுழிபுரத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தற்பொழுது சீன வீட்டுத் திட்டம் தொடர்பில் கடற்றொ ழிலாளர்களாக நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

ஆகவே, சீன அரசாங்கத்தி னால் வழங்கப்படும் பொருத்து வீட்டு திட்டம் எமக்கு உகந்தது அல்ல. நாங்கள் கடற்கரை யினை அண்டித்தான் வாழ்ந்து வருகின்றோம். சூறாவளி காற்றி னால் பொருத்து வீடு அழிய கூடும் இயற்கை அனர்த்தங்க ளுங்கு அஞ்சி வாழ வேண்டிய சூழல் ஏற்படும் .

ஆகவே எங்களுக்கு பொருத் தமற்ற இவ்வாறான வீட்டு திட் டங்களை முற்றிலும் நிராகரிக் கின்றோம்.

எமது கடற்றொழிலாளர்கள் யுத்தத்தினாலும் பாதிக்கப்பட் டுள்ளோம். தொடர்ந்து இழுவை மடியாலும் பாதிக்கபட்டுள் ளோம். பொது மக்களுக்கு பல நெருக்கடியான சூழலிலும் ஜீவனோபா யமாக மேற்கொண்டு வருகின் றோம்.

நாங்கள் கடந்த காலங்களில் சீன அரிசி வழங்கப்பட்டதாக வும் அறிகின்றோம். அவை கட ற்றொழில் மக்களுக்கு முழுமை யாகவும் கிடைக்கப் பெறவில்லை. சிலர் இதில் இலாபம் அடைந்து கொண்டிருக்கின்றனர்.

அரசியல் ரீதியாக பலர் இலாபம் அடைகின்றனர். இன் றும் தரம் குறைந்த பொருட்கள் வருகின்றன.

மேலும் கடற்றொழிலாளர்க ளாகிய எமக்கு நிரந்தரமான வீட்டுத்திட்டம் அனைவரும் ஏற்றுக் கொள்ள கூடிய வகை யில் பாதிக்கப்பட்ட அனைத்து கடற்றொழிலாளர்களுக்கும் அவர்களுக்கு வழங்கவேண்டும்.

இழுவைமடியினால் ஏற்க னவே எமது மக்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். தங்க நகைகளை அடைவு வைத்தே எமது குடும் பங்கள் முதலீடு செய்கின்றன.

வங்கியிலும் நகைகள் ஏலத் தில் விலைப்படுகின்ற சூழல் ஏற்படுகின்றது .எமது சுழிபுரம் கடற்கரையில் மக்கள் தொடர்ந் தும் பாதிக்கபடுகின்றனர்.

இவ்வாறான நேரத்தில் சமுர்த்தி நிறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மீனவர்கள் இன்னும் பாதிப்பினை எதிர் கொள்ள பலர் இதனை அனுப விக்கின்றனர்.

உண்மையில் எமக்கு இந்த சீன அரசு ஏமாற்றாது தரமான பொருட்களையும் திட்டங்க ளையும் வழங்கவேண்டும்.

வடக்கு கிழக்கு கடற்றொழி லாளர்களுக்கு சீன அரசு உதவி வழங்குகின்றது என சொல்லு கின்றனர். இதுவரை எமது அலைமகள் கடற்றொழிலாளர் களுக்கு எந்த உதவியும் கிடைக் கப் பெறவில்லை.பலரும் உதவி வருகின்றது என கேள்வி எழுப் புகின்றார்கள் ஆனால் இதுவரை எமக்கு உதவி வழங்கபடவில்லை.

அரிசி வருவதாக கூறினார் கள் அதிலும் தர பிரச்னை அர சியல்ரீதியாக தங்களுடைய காரியாலயங்களில் வைத்து எங் களுடைய மக்களை பார்க்க வில்லை. அரசியல் வாதிகள் பொதுமக்களை கவனிக்க வேண் டும் .எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு எட்டவில்லை -என்றார்.

(அ)

# அரசமைப்பிலுள்ள ஓட்டைகளை தேடும் நபராக ஜனாதிபதி ரணில்!

## சாடுகின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜூலை 09

"அரசியலமைப்பில் உள்ள ஓட்டைகளைத் தேடும் நபராக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மாறியுள்ளார்" என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேம தாச தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப் பட்ட மக்கள் அரண் வேலைத் திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தற்போதைய ஜனாதிபதியி னாலோ அல்லது அவரது சகாக் களினாலோ நாட்டைக் கட்டி யெழுப்பவோ அபிவிருத்தி செய் யவோ முடியாது. நாட்டில் மாற்றத்தை கொண்டு வருவதற் கான விருப்பமும் அவர்களிடம் இல்லை.

ஜனாதிபதி ரணிலுக்கு சாதா ரண மக்கள் மீது எந்த உணர் வும் இல்லை. தன்னை ஆட் சிக்கு கொண்டு வந்த நாட்டை அழித்த திருடர்கள் கூட்டத்தை பாதுகாப்பதே தனது ஒரே நோக் கமாக கொண்டு செயற்பட்டு வருகின்றார்.

தற்போதைய அரசாங்கம் தோல்வியைத் தழுவும் என்றே சமீபத்தைய சகல கண்காணிப்பு அறிக்கைகளும் சொல்கின்றன. ஜனாதிபதி தேர்தல் மூலம் மீண்டும் இவர்களால் அதிகா ரத்துக்கு வர முடியாது.

வரலாற்றில் முதன்முறை யாக இடதுசாரி சக்திகளும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளன. இம்முறை இனம், மதம், சாதி, வர்க்கம், கட்சி பேதமின்றி ஐக்கிய மக் கள் சக்தி வரலாற்று சிறப்பு மிக்க மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்ளும்.

இவர்கள் நமது நாட்டின் அபிவிருத்திக்கு தடையாக இருப்பதோடு, நாட்டின் வளர்ச் சிக்கு எதிராகவும் செயற்பட்டு வருகின்றனர்.

எனவே ஊழல் தரப்புடன் இணைந்து ஜனாதிபதி முன்னெ டுத்து வரும் இந்த சதியை மக் கள் பலத்தால் தோற்கடிப்போம் -என்றார்.

(அ)

# கட்சி மாறும் தீர்மானத்தை ஒத்திவைத்துள்ள எம்.பிக்கள்?

கொழும்பு, ஜூலை 09

பல்வேறு அரசியல் கட்சிக ளைச் சேர்ந்த சுமார் இருபது பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு காரணங்களால் கட்சி மாறுவதற்கான தீர்மானத்தை எடுக்கத் தயங்குவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், சில பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு அந் தந்த கட்சிகள் வழங்குவதாக வாக்குறுதியளித்த வரப்பிரசாத சலுகைகள் கிடைக்கப்படாத காரணத்தினால் கட்சி மாற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரபல தலைவர் ஒருவர் மாறிய கட்சியில் , அவர் கோரிய பத வியை வழங்காத காரணத்தி னால் மீண்டும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைய தகவல்களை அனுப்பி வருவதாக தெரியவரு கிறது.

இதேவேளை, மற்றொரு குழு பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் கருத்துக் கணிப்பு அறிக்கைகளை ஆராய்ந்த பின் னர் கட்சி இடமாற்றங்களை ஒத்திவைத்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

எதிர்க்கட்சியில் பிரபல இரு பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ளும் முயற்சியில் சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருவதால் அவர்கள் இருவரை இணைத் துக் கொள்வது சிரமமாக உள் ளது எனவும் குறிப்பிடப்படு கின்றது.

எவ்வாறாயினும், ஜனாதிப தித் தேர்தலுக்கு முன்னர் பாரா ளுமன்ற உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் செயற் பாடுகளை அந்தந்த அரசியல் கட்சிகள் தொடர்வதாக தகவல் கள் தெரிவிக்கின்றன.

(அ)

# ஸ்ரோபரி செய்கை வெற்றி

கொழும்பு, ஜூலை 09

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு நுவரெலியாவில் பயி ரிடப்பட்ட ஸ்ரோபரி செய்கை வெற்றியளித்துள்ளதாக விவ சாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாதிரி செய்கை அரச அனுசரணையில் முன்னெடுக் கப்படும் முதலாவது திட்டமா கும்.

நுவரெலியாவின் பிளாக்பூல் பகுதியில் 52 விவசாயிகளின் பங்களிப்புடன் 40 பசுமை இல் லங்களில் இந்த பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# மேலும் 822 பேர் சிக்கினர்!

கொழும்பு, ஜூலை 09

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப் பொருள் தொடர்பான குற்றங்க ளின் அடிப்படையில் 822 சந் தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்க ளில் 811 ஆண்களும் 11 பெண்க ளும் உள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைதான சந்தேக நபர்களில் 32 பேர் பொலிஸ் தடுப்பு காவ லில் வைக்கப்பட்டுள்ளதுடன் 12 பேர் புனர்வாழ்வு நிலையங்க ளுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் 304 கிராம் 623 மில்லிகிராம் ஹெரோ யின், 495 கிராம் 52 மில்லிகி ராம் ஐஸ் போதைப்பொருள், 3,884 கிராம் 847 மில்லிகிராம் கஞ்சா, 4,391 கஞ்சா செடிகள் மற்றும் 340 போதை மாத்திரை கள் என்பன கைப்பற்றப்பட்டுள் ளன. (அ)


# நீர்வேலியில் சுக்கிர வார சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 09

நீர்வேலி அருள்மிகு கந்தசு வாமி தேவஸ்தானத்தில் நடாத் தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள் ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி சுதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற வுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக் கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவா மிநாதக்குருக்களின் ஆசியுரை யினை தொடர்ந்து தலைமையு ரையினை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், சிறப்புச்சொற்பொழிவினை இளஞ்சைவப்புலவர், பிரசங் கச்சுடர் க. கயிலைவாசன் "குரு பக்தி" என்னும் விடயப்பொரு ளில் சிறப்புச்சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து அற நெறிப் பாடசாலை மாணவர்க ளிடம் வினாக்கள் தொடுக்கப் பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ)

# வட மாகாணத்தை சேர்ந்த கல்விமாணி பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்



யாழ்ப்பாணம், ஜூலை 09

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்விமாணி பட்டதா ரிகள் 13 பேருக்கு நேற்று ஆசி ரியர் நியமனம் வழங்கி வைக் கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுந ரின் பங்கேற்புடன் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய வடமாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ்,

தாம் கற்றுக்கொண்ட நுட் பங்களை பாடசாலைகளில் பயன்படுத்தி, கற்பித்தல் செயற் பாடுகளில் மாற்றத்தை ஏற்ப டுத்த வேண்டும்.

அதனூடாக கல்வித் தரத்தை பேணுவதுடன், மாணவர்கள் இலகுவாக கற்றல் செயற்பாடு களில் ஈடுபடுவதற்கான செயற் பாடுகளை முன்னெடுக்க வேண் டும்.

மாணவர்கள் பாடசாலைக்கு விரும்பி வருகை தரும் வகை யில் வகுப்பறைகள் மாற்றப்பட வேண்டும்.

அதேவேளை, மாணவர்க ளின் முன்மாதிரிகளாக ஆசிரி யர்கள் திகழ வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

# திருவாசகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 09

சைவ வாழ்வியலில் திருவா சகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்ப டுத்தும் முகமாக சிவநெறிப் பிர காசர் சமயஜோதி சுதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 13 தெல்லிப்பளை அருள்மிகு சிவ காமி அம்பாள் சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இடம்பெ றவுள்ளது.

மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தைத் தொடர்ந்து சைவப்புலவர் , பிரசங்க பூஷ ணம் க. கைலநாதன் "மாணிக்க வாசகரும் திருப்பூவல்லியும்" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு இடம்பெறும். சொற்பொழிவில் இருந்து மாண வர்களிடம் வினாக்கள் தொடுக் கப்பட்டுப் பாராட்டுப் பரிசில் கள் வழங்கப்படவுள்ளன.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
09.07.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், ஆனி 25
**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வடக்கின் வைத்தியத்துறை

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையை மையப்படுத்தி வெளிவரும் தகவல்கள் வடக்கு மாகாண வைத்தியத்துறையின் மீது மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த வைத்தியத் துறையின் மீதான மக்கள் நம்பிக்கையை கேள்விக்குள்ளாகியுள்ளது. ஒரு வைத்தியரின் குற்றச்சாட்டும் அதனைத் தொடர்ந்துஇடம்பெற்றுவரும் உரையாடல்களும் வடக்கின் ஒட்டுமொத்த வைத்தியத்துறையின் மீது விரல் நீட்டுகின்றது. அனைத்து வைத்தியர்களையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றது.

குறிப்பாக அரசாங்க வைத்தியசாலைகள் திட்டமிட்டு முடக்கப்பட்டு தனியார் வைத்தியத் துறையை ஊக்குவிக்கும் நோக்கில் விடயங்கள் இடம்பெறுவதாக வெளிவரும் தகவல்களில் உண்மையிருக்கின்றதா அல்லது அவைகள் பொய்யான குற்றச்சாட்டுக்களா - இதற்கு ஆம் என்றோ அல்லது இல்லையென்றோ எவரும் பதிலளித்துவிட முடியாது - ஆனால், வடக்கின் ஆளுநர் உள்ளடங்கலாக, பிராந்திய சுகாதார பணிப்பாளர், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே இது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்களாவர். ஏனெனில் வைத்தியத் துறையின் மீது கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

ஏற்கனவே சுகாதாரத் துறையில் ஊழல் இடம்பெற்றதான குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சிறையிலடைக்கப்பட்டிருக்கின்றார். அது தொடர்பான விசாரணைகளில் மருந்து கொள்வனவில் ஊழல்கள் இடம்பெற்றிருப்பது அம்பலமாகியிருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில் வடக்கின் ஒட்டுமொத்த சுகாதார துறையின் மீதும் வைத்தியர்கள் மீதும் மக்கள் விரல் நீட்டக் கூடியவாறான நிலைமை உருவாகியிருக்கின்றது. இது ஆரோக்கியமானதல்ல.

சமூக ஊடகங்களில் வெளிவருபவை அனைத்தும் உண்மைகள் என்றில்லை - ஆனால் சமூக ஊடகங்கள் அதிகம் பொது மக்களை பாதிக்கக் கூடியதாக இருப்பதால் இது போன்ற குற்றச்சாட்டுக்கள் வெளிவரும் போது தொடர்புடைய அதிகாரிகள் குற்றச்சாட்டுக்களை சாதாரணமாக தட்டிக் கழித்துவிட்டும் செல்ல முடியாது - செல்லக் கூடாது.

வைத்தியத் துறை ஒரு புறம் உன்னதமான சேவையாக இருந்தாலும் கூட இன்னொருபுறம் அதிக பணம் அள்ளும் துறையாகவும் இருக்கின்றது. நோய்களிலிருந்து விரைவாக குணமடைய வேண்டும், குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை வேண்டும் - இப்படியான பல காரணங்களால் பலரும் தனியார் வைத்தியசாலைகளை நாடுகின்றனர். ஆனால் அவர்களுக்கு அதற்கான வசதியுண்டு - ஆனால், பெரும்பான்மையான ஏழை மக்களுக்கு அரசாங்க வைத்திசாலைகளை ஒன்றே நோய்கள் தீர்க்கும் ஆலயங்களாகும். ஏழைகளுக்கோ அங்குள்ள வைத்தியர்கள் கடவுகள் போன்றவர்கள். எனவே அரசாங்கம் ஏழை மக்கள் வைத்திய சாலைகள் மீது நம்பிக்கையிழக்கும் அல்லது கோபம் கொள்ளும் வகையிலான விடயங்கள் இடம்பெறுவதை ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது.

சுகாதார அமைச்சு மற்றும் வடக்கு மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இந்த விடயத்திற்கு பின்னாலுள்ள உண்மைகள் அல்லது பொய்கள் இரண்டையும் ஆராய வேண்டும். பொறுப்பற்று இருத்தல் சரியல்ல.

# ஜனநாயக செயன்முறையில் அரசாங்கத்தின் கடப்பாடு மீதான நம்பிக்கை பொருளாதார மீட்சிக்கு முக்கியமானது!



ஸ்ரீ லංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

ஜனாதிபதியின் பதவிக்காலத்தின் கால நீட்சி தொடர்பில் தீர்மானம் ஒன்றை அறிவிக்கும்வரை ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைக்கக் கோரும் அடிப்படை உரிமை மனு ஒன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. சாத்தியமானளவு விரைவாக அதை பரிசீலனைக்கு எடுப்பதற்கு உயர்நீதிமன்றம் எடுத்த தீர்மானத்தை தேசிய சமாதானப் பேரவை வரவேற்கிறது.

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதைப் பற்றி தொடருகின்ற நிச்சயமற்றநிலை சகல விதத்திலும் நாட்டுக்கு மிகவும் பாதகமானது.அது சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களை கிரமமாக நடத்துவது தவிர்க்கமுடியாத அம்சமாக இருக்கும் ஜனநாயகச் செயன்முறையில் உள்ள நம்பிக்கையை மலினப்படுத்தும்.

ஆட்சிமுறையின் இரு அடுக்குகளான உள்ளூராட்சி சபைகளுக்கும் மாகாணசபைகளுக்குமான தேர்தல்கள் நடத்தப்படாமல் இருப்பது இலங்கையில் துரதிர்ஷ்டவசமான யதார்த்தமாகும். உள்ளூராட்சி தேர்தல்கள் ஒரு வருடத்துக்கும் அதிகமான காலமாகவும் மாகாணசபை தேர்தல்கள் ஐந்து வருடங்களுக்கும் அதிகமான காலமாகவும் நடத்தப்படாமல் இருக்கின்றன.

அடுத்த வருடம் வரை பாராளுமன்ற தேர்தலை நடத்தவேண்டிய சட்டரீதியான தேவை இல்லை என்ற போதிலும், இரு வருடங்களுக்கு முன்னர் அந்த தேர்தல் நடத்தப்பட்டு மக்களிடம் இருந்து புதிய ஆணை பெறப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் நம்புகிறோம். ஏனென்றால் மக்கள் போராட்டத்தை அடுத்து ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டதால் இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் மக்கள் வழங்கிய ஆணை மீளப்பெறப்பட்டு விட்டது என்பதே அர்த்தமாகும்.

உரிய நேரத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் கூறியிருக்கிறார் என்பதை தேசிய சமாதான பேரவை கவனத்தில் எடுக்கிறது. அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் இவ்வருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை தேர்தல்கள் ஆணைக்குழுவும் வலியுறுத்தியிருக்கிறது.

எந்த காரணத்துக்காக இருந்தாலும் ஜனாதிபதி தேர்தலை தாமதிப்பதற்கு வெளிப்படைத்தன்மை இல்லாமல் மேற்கொள்ளப்படக் கூடிய எந்தவொரு நடவடிக்கையும் கடந்த இரு வருடங்களிலும் அடையப்பெற்ற பயன்களை மறுதலையாக்கிவிடக் கூடிய ஒரு நிலைவரத்துக்கு நாட்டைக் கொண்டு சென்றுவிடும் என்பதை அனுபவம் மிகுந்த ஒரு அரசியல் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி விளங்கிக்கொள்வார்.


கடந்த காலத்தில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதன் விளைவாக இலங்கை மீது திணிக்கப்பட்ட அனர்த்தங்களை ஜனாதிபதி அறியாதவருமல்ல.

தேர்தல்களைப் போன்ற மிகவும் அடிப்படையான விவகாரங்களில் நிலவும் நிச்சயமற்றதன்மை இலங்கையின் உறுதிப்பாட்டின் மீதான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நம்பிக்கையை மலினப்படுத்திவிடும்.

ஆட்சிமுறையில் உண்மையும் முரண்பாடின்மையும் வெளிப்படைத் தன்மையும் இருக்கவேண்டியது சமூகத்தின் உறுதிப்பாட்டின் மீதான நம்பிக்கையைப் பேணுவதற்கு மிகவும் அவசியமானவையாகும். அவ்வாறு இருந்தால் தான் இன்று செய்யப்படுகின்ற முதலீடுகள் எதிர்காலத்தில் நேர்மறையான விளைவுகளைத் தரக்கூடியதாக இருக்கும். ஜனாதிபதி தன்னை முழுமையாக அர்ப்பணித்து முன்னெடுக்கின்ற பொருளாதார மீட்சிக்கும் அது அவசியமானதாகும்.

கடந்த காலத்தைய நெருக்கடிகள் மீண்டும் ஏற்படுவதை இலங்கை தவிர்க்கவேண்டுமானால், பாராளுமன்ற பெரும்பான்மையின் ஊடாக அல்லது சட்டத்தை ஒரு குறிப்பிட்ட முறையில் வியாக்கியானப்படுத்துவதன் ஊடாக தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு அரசியலமைப்பில் ஒட்டுவேலைகளைச் செய்வது உடனடியாக தவிர்க்கப்படவேண்டும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 09 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - ஆனி 25

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 07.31 - 09.00 |
| ராகு காலம் | : | 03.00 - 04.30 |
| திதி | : | சதுர்த்தி |




**மேடம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். தாயாருக்கு மருத்துவ செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப்பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டும் நாள்.

**சிம்மம்**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம்ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**கன்னி**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும்.

**துலாம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் தன லாபம் உண்டு. சாதித்துக் காட்டும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**மகரம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள் . திடீர் யோகம் கிட்டும்

**மீனம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். நட்பால் ஆதாயம் உண்டு. அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். கனவு நனவாகும் நாள்.

# 31 நாட்களில் 133 கொலைகள்!

## தமிழக அரசுக்கு சீமான் கண்டனம்

சென்னை, ஜூலை 09

தமிழகத்தில் 31 நாட்களில் 133 படுகொலைகள் இடம்பெற்றன. செல்வாக்கு பெற்ற மாநில தலைவருக்கே பாதுகாப்பு இல்லையென்றால், சாதாரண மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு அஞ்சலி செலுத்திய பிறகு செய்தியாளர்கள் சந்திப் பின்போது சீமான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, தமிழ்நாட்டில் 31 நாட்களில் 133 படுகொலைகள் இடம்பெற்றன.

ஆம்ஸ்ட்ராங் முன் வைத்த தத்துவம் மரணித்து போகாது. சரண் அடைந்தவர்களை விசாரித்து ஏன் எதற்காக கொலை செய்தார்கள் எனக் கண்டறிந்தார்களா? குற்றவாளிகள் சரணடைந்தார்களா? கைது செய்யப்பட்டார்களா. அந்த உண்மையை முதலில் கூறுங்கள். வீட்டு வாசலில் வந்து ஒரு தலைவரை வெட்டிக் கொன்று விடலாம் என்ற துணிவு வருகிறது என்றால் அது எப்படி? என சீமான் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். (எ)

# ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு மாயாவதி அஞ்சலி: சி. பி. ஐ. விசாரணை நடத்த வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 09

படுகொலை செய்யப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு அந்தக் கட்சியின் தேசிய தலைவர் மாயாவதி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். உண்மையான குற்றவாளிகளை கைது செய்ய, இந்தக் கொலை வழக்கை சி. பி. ஐ. விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்றும் மாயாவதி வலியுறுத்தினார். (எ)




# அரசியல் கொலைகள் தமிழகத்தில் அதிகரிப்பு

## எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

மதுரை, ஜூலை 09

தமிழகத்தில் அரசியல் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அ. தி. மு. க. பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்கள் சந்திப் பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. தமிழக முழுவதும் அனைத்து குற்றங்களும் அதிகரித்துள்ளன. சமீபகாலமாக பல்வேறு கட்சித் தலைவர்கள் மர்மமான முறையில் கொல்லப்படுகின்றனர்.

சென்னையில் பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்டார். கொளத்தூர் தொகுதியிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

முதல்வர் தொகுதியிலேயே தேசிய கட்சியின் மாநிலத் தலைவர் படுகொலை செய்யப்பட்டிருப்பது சட்டம், ஒழுங்கு தமிழகத்தில் சந்தி சிரிக்கும் சூழலாக தான் பார்க்கப்படுகிறது. மக்களுக்கு மட்டுமின்றி அரசியல் தலைவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. பொலிஸாரை கண்டு யாருக்கும் பயமில்லை- என்றார்.

# அரசு இரும்புக் கரம் கொண்டு சட்டத்தை பாதுகாக்க வேண்டும்

## பிரேமலதா விஜயகாந்த்

தருமபுரி, ஜூலை 09

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கை இரும்புக் கரம் கொண்டு அரசு பாதுகாக்க வேண்டும் என்று தே. மு. தி. க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

தருமபுரியில் நடைபெற்ற தே. மு. தி. க. நிர்வாகி இல்ல திருமண விழாவில் பங்கேற்ற பிரேமலதா, பின்னர் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். பகுஜன் சமாஜ் கட்சி மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங், முதல்வர் தொகுதியில், மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் கொலை செய்யப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நெல்லை காங்கிரஸ் தலைவர் ஜெயக்குமார் கொலை வழக்கில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. சேலத்தில் அ. தி. மு. க. நிர்வாகி சண்முகம் கொலை வழக்கில், தி. மு. க. பிரமுகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியுள்ளார். அவர் ஏன் முதல்வரை நேரில் சந்தித்து, சட்டம் - ஒழுங்கு பிரச்னை குறித்து வலியுறுத்தக் கூடாது? என பிரேமலதா கேள்வி எழுப்பினார். (எ)

# "கூலிப்படைகளாக மாறும் தமிழ்நாடு இளைஞர்கள்"

விழுப்புரம், ஜூலை 09

வேலைவாய்ப்பு இல்லாத தமிழ்நாடு இளைஞர்கள் தீயவர்களிடம் சிக்கி கூலிப்படைகளாக மாறி வருகின்றனர். பொலிஸாரும் இந்த ஆட்சியின்மீது மிகுந்த வருத்தத்துடன் உள்ளனர். தி. மு. க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று அ. ம. மு. க. பொதுச் செயலாளர் ரி. ரி. வி. தினகரன் தெரிவித்தார்.

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் பா. ம. க. வேட்பாளர் சி. அன்புமணியை ஆதரித்து தினகரன் பிரசாரம் செய்தார். இதன்போது, பெண்களுக்கு இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லை. இதே நிலை தொடர்ந்தால் தமிழ்நாடு பீஹாரை போல மாறிவிடும் வாய்ப்புள்ளது. வீட்டுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு தாலியை பறிப்பதாக மக்கள் கூறுகின்றனர்- என்றார் தினகரன். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைச் சீர்குலைக்க சிலர் சதி நடவடிக்கை!

## ஜனாதிபதி ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 09

**நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் வேளையில் சிலர் அதனைச் சீர்குலைக்க முயற்சிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



அரச சேவையாளர்களுக்கு இந்த வருடத்தில் மீண்டும் சம்பள அதிகரிப்பு வழங்க முடியாது. ஆனால் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு திட்டத்தில் அதற்கான நிதியை ஒதுக்க முடியுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை, நாடு பொருளாதார அச்சுறுத்தலிலிருந்து மீண்டுவரும் வேளையில் போதைப் பொருளின் அச்சுறுத்தலிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு அனைவரின் ஆதரவும் அவசியமாகும். எதிர்காலச் சந்ததியினர் போதை பாவனைக்குப் பலியாகும் பட்சத்தில், நாட்டைக் கட்டியெழுப்பு அரசாங்கம் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வீணாகிவிடும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

(அ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி மூதாட்டி ஒருவர் கொலை!

## பேரனின் மனைவி கைது

கொழும்பு, ஜூலை 09

கண்டி பிரதேசத்தில் எத்கால்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உலப்பனை பகுதியில் நேற்று முன் தினம் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக எத்கால்ல பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, உலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 78 வயதுடைய மூதாட்டி ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது பேரனின் குடும்பத்தினருடன் ஒன்றாக வாழ்ந்து வந்துள்ளதாகவும் குடும்பத் தகராறு காரணமாக பேரனின் மனைவியால் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின்போது கொலை செய்யப்பட்டவரது பேரன் வீட்டில் இல்லை என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மூதாட்டியின் சடலம் கம்பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பேரனின் 32 வயது மனைவி கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் எத்கால்ல பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

(அ)

# யானை தாக்கி இளைஞன் பலி!

கொழும்பு, ஜூலை 09

காட்டு யானை தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

பெலிகல்ல மஹியங்கனை பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காட்டு யானை தாக்கியதில் படுகாயம் அடைந்த குறித்த இளைஞனை மஹியங்கனை ஆரம்ப வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது இடைநடுவில் அவர் உயிரிழந்தார் என பொலிஸார் மேலும் கூறினர்.

சடலம் மஹியாகனை ஆரம்ப வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் இருவர் அரசின் பக்கம் தாவுவர்!

கொழும்பு, ஜூலை 09

ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு எம்.பிக்கள் டொலர்களில் வெகுமதிகளை பெற்று சிறிது நேரத்தில் கட்சியை விட்டு வெளியேறுவார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பி ஒருவரும் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொருவரும் விரைவில் அரசாங்கத்துக்குச் செல்வார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

இந்த அரசியல் விபசாரிகள் அமெரிக்க டொலர்களில் பண வெகுமதிகள் உட்பட சலுகைகளுக்கு வீழ்ந்துள்ளனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் ராஜகருணா கூறினார்.

"நாம் ஒரு சில எம்.பிக்களை மட்டுமே இழக்கப் போகிறோம். ஆனால் பலர் தங்கள் பதவிகளை விட்டுக்கொடுத்து எதிர்க்கட்சிக்கு செல்லத் தயாராக உள்ளனர்," என்று அவர் மேலும் கூறினார்.

(அ)

# அத்துருகிரிய துப்பாக்கிச்சூட்டில் கிளப் வசந்த உட்பட இருவர் பலி!

கொழும்பு, ஜூலை 09

அத்துருகிரிய நகரில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில் பிரபல பாடகி கே.சுஜீவா உள்ளிட்ட 06 பேர் காயமடைந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூ ட்டில் பலத்த காயங்களுக்குள்ளான "கிளப் வசந்த" என அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேரா உயிரிழந்தார்.



அத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மற்றுமொருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் கே.சுஜீவாவின் கால்களில் காயமேற்பட்டுள்ளதாக தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர், வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்தார்.

அத்துடன் அவரின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் அவர் கூறினார்.

அத் துருகிரிய படுகொலை சம்பவம்:

# துப்பாக்கிதாரிகளின் கார் கண்டுபிடிப்பு!

கொழும்பு, ஜூலை 09

அத்துருகிரிய படுகொலைச் சம்பவத்தின்போது துப்பாக்கிதாரிகள் பயன்படுத்திய கார் கடுவெல, கொரதொட்ட பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை அத்துருகிரிய நகரில் மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகில் உள்ள அழகுக் கலை நிலையத் திறப்பு விழாவின்போது குறித்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த தீவிர விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# 44 வீதமான மக்கள் இன்னும் வாக்களிக்க தீர்மானமில்லை

## கூறுகிறார் தம்மிக்க பெரேரா

கொழும்பு, ஜூலை 09

நாட்டின் பொருளாதாரத்தில் கட்டியெழுப்பப்படும் முறைமை தொடர்பில் எந்த வொரு அரசியல் கட்சியும் மக்களுக்கு அறிவிக்காத காரணத்தினால் 44 வீத மக்கள் வாக்களிக்க இன்னும் தீர்மானிக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல வர்த்தகருமான தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் கல்வி பயின்ற புதியவர்கள் மற்றும் சிறுவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

இலங்கையை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கையின் தற்போதைய கல்வி முறைக்குப் பதிலாக சர்வதேச கல்விக்கு நிகரான கல்வி முறை இலங்கையிலும் உருவாக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் சமூக வலைத்தளங்களில் நடக்கும் தவறான செயல்களைப் பற்றி நாம் ஒரு போதும் கவலைப்பட வேண்டாம். உலகின் பிற நாடுகளின் குழந்தைகளுடன் போட்டியிடக்கூடிய குழந்தைகளின் தலைமுறையை உருவாக்க பாடுபட வேண்டும் என்று அவர் கூறினார்.

இலங்கையின் மிகப்பெரும் கட்சியான பொதுஜன பெரமுனவின் உறுப்பினராக, அமைச்சராக தனது செயற்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளதாகவும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நபரை அதிகாரத்திற்கு கொண்டு வருவதே மக்களின் பிரதான இலக்கு எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# தென்கொரியா பயணித்த விமானம் மீண்டும் கட்டுநாயக்கவில் இறங்கியது!

கொழும்பு, ஜூலை 09

தென்கொரியாவின் இன்சியான் சர்வதேச விமான நிலையத்தை நோக்கிப் பயணித்த சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானமொன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியதாக விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விமானம் நேற்று முன்தினம் மாலை 06.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தென்கொரியாவின் இன்சியான் விமான நிலையத்தை நோக்கி பயணித்த நிலையில், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பயணத்தின் பின்னர் மீண்டும் இரவு 8.10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது.

இந்த விமானத்தில் 144 பயணிகளும் 15 பணியாளர்களும் இருந்துள்ளனர்.

இந்த பயணிகளை வேறொரு விமானத்தின் மூலம் தென்கொரியாவுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது சொத்து விவரங்களை சமர்ப்பிக்காத 100 எம்.பிக்கள்

## பட்டியலை இலஞ்ச ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 09

**பாராளுமன்ற உறுப்பினர்கள் 169 பேர் தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டிய நிலையில், இதுவரை 69 பேரே தமது விவரங்களை சமர்ப்பித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.**

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை பிரதி வருடமும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்குள் சபாநாயகருக்கு சமர்ப்பிக்கவேண்டியுள்ளது. எனினும் இதுவரை 100 எம்.பிக்கள் தமது விவரங்களை கையளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே சபாநாயகரிடம் தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை சமர்ப்பிப்பர். அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை ஜனாதிபதியின் செயலாளரிடமே கையளிப்பர். அந்த வகையில் இதுவரை சொத்துக்கள் தொடர்பான விவரங்களை சமர்ப்பிக்காத பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல்கள், பாராளுமன்ற பிரதானிகளால் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# நெல் கொள்வனவுக்காக சலுகை வட்டியில் கடன்!

கொழும்பு, ஜூலை 09

விவசாயிகளிடமிருந்து நியாயமான விலையில் நெல்லைக் கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்தும் வகையில், 2024 சிறுபோக நெல் கொள்வனவுக்காக சலுகை வட்டியில் கடன் வழங்கப்படவுள்ளது. சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு இக்கடனை சலுகை வட்டியில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு 50 மில்லியன் ரூபாவையும், நெல் களஞ்சியசாலை உரிமையாளர்கள் மற்றும் மொத்த நெல் கொள்வனவாளர்களுக்கு 25 மில்லியன் ரூபாவையும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வங்கிகள் மூலம் 13 வீத வருடாந்த வட்டிக்கு இந்த கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவிக்கின்றது.

இந்த வட்டியில் 9 வீதத்தை கடன் பெற்றுக் கொள்வோர் செலுத்த வேண்டியுள்ளதுடன் மீதமான 4 வீதத்தை வட்டி நிவாரணமாக வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கடனை 180 தினங்களுக்குள் வழங்கி நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. (அ)

# மன்னார் விபத்தில் அருட்தந்தை பலி!

மன்னார், ஜூலை 09

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தின் உதவி இயக்குநர் அருட்தந்தை கே.ஜொனார்த்தனன் அடிகளார் உயிரிழந்தார்.

தலைமன்னார் ஆலயத்தில் மாலை நேரத் திருப்பலியை ஒப்புக் கொடுத்துவிட்டு, அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் அவர் திரும்பிக் கொண்டிருந்த போது கட்டுக்காரன் குடியிருப்புப் பகுதியில் விபத்து இடம்பெற்றது.

விபத்தில், படுகாயமடைந்த அவர் மன்னார் பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

விபத்து குறித்து மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாட்டைக் கடத்திச்சென்ற இருவர் பொதுமக்களால் நையப்புடைப்பு!

வவுனியா, ஜூலை 09

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் மாட்டைக் கடத்திச் சென்ற இருவரை மடக்கிப்பிடித்த இளைஞர்கள் அவர்களை நையப்புடைத்ததுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

வவுனியா பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் காணி ஒன்றில் கட்டி நின்ற மாட்டைத் திருடிச் சென்ற இருவரை தாண்டிக்குளம் பகுதியில் வழிமறித்த இளைஞர்கள், அவர்களை கட்டி வைத்து நையப்புடைத்ததுடன் வவுனியா பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த விடயம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர். இதன்போது குறித்த இருவர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அங்கு ஒன்றுகூடிய பொதுமக்கள் பொலிஸாருக்கு தெரிவித்தனர். இதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் சற்றுநேரம் முரண்பாடான நிலைமை ஏற்பட்டிருந்தது.

எனினும் குறித்த இருவரையும் கைதுசெய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் பொதுமக்களிடத்தில் உறுதியளித்த நிலையில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தது. (அ)

# ரூ.10 இலட்சம் பெறுமதியான சொத்து திருடிய பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, ஜூலை 09

கொஸ்கம பிரதேசத்தில் வீடொன்றை உடைத்து 10 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களைத் திருடிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட பொருட்களிலிருந்த கை ரேகைகள் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுடைய கைரேகையுடன் ஒத்துப் போனமையால் இவர் கைது செய்யப்பட்டதாக கொஸ்கம பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் அவிசாவளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலி ஸாருக்கு கிடைத்த கைரேகை களைக் கைரேகை துறைக்கு விசாரணைக்காக அனுப்பிய தையடுத்து சந்தேகத்தின் பேரில் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டார். (அ)

# பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்தில் தீ விபத்து!

கொழும்பு, ஜூலை 09

கல்கிஸை பிரிவில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் உள்ள பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்தில் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இருந்த பல ஆவணங்கள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

தீ பரவல் ஏற்பட்டபோது பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் புஷ்ப குமார அலுவலகத்தில் இல்லை என பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

தெஹிவளை மாநகர சபை அதிகாரிகள் இணைந்து தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த தீ விபத்து தொடர்பில் கல்கிஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அழகுசாதன பொருட்கள் தொடர்பில் முறையான கட்டுப்பாடுகள் அவசியம்

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 09

அழகுசாதனப் பொருட்கள் தொடர்பில் முறையான கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதன் காரணமாக எதிர்காலத்தில் துரதிர்ஷ்டவசமான சூழலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறான அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்துவதால் உயிரிழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பும் காணப்படுவதாக அவர் எச்சரிக்கை விடுத்தார்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண வலியுறுத்தினார்.

பிரபல மொடல் பியுமி ஹன்சமாலியினால் விற்பனை செய்யப்படும் கிரீம் தொடர்பில் சமூகத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், பியுமி ஹன்சமாலி விற்பனை செய்யும் கிரீம்கள் பதிவு செய்யப்படவில்லை என தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அண்மையில் தெரிவித்திருந்தது.

இதனிடையே, நாட்டில் அழகுசாதனப் பொருட்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டக் கட்டமைப்போ அல்லது குறிப்பிட்ட சட்டமோ தற்போது இல்லை என தெரியவருகிறது.

இதன் காரணமாக பதிவு செய்யப்படாத பொருட்களுக்கு எதிராக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்ட நடவடிக்கை எடுப்பதில் தடை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில், இந்த அழகுசாதனப் பொருட்கள் தொடர்பான சட்டமூலமொன்றை உருவாக்குவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்திருந்தது. (அ)

# சஜித்தின் திட்டங்கள் குறித்து நடக்கும் உள்ளக கணக்காய்வு

கொழும்பு, ஜூலை 09

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச 2015-2019 வரையிலான காலப் பகுதியில் வீடமைப்பு அமைச்சராக இருந்த சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்திய திட்டங்கள் தொடர்பில் உள்ளக கணக்காய்வு நடத்தப்பட்டு வருவதுடன், அரசியல் நோக்கத்துடன் இது மேற்கொள்ளப்படுவதாக தெரியவந்துள்ளது.

அந்த சந்தர்ப்பத்தில் அமுல்படுத்தப்பட்ட 184,463 வீடமைப்புத் திட்டங்களும் சஜித் பிரேமதாசவின் மேற்பார்வையில் நேரடியாக நிர்வகிக்கப்பட்டதாகவும், அதற்காக ஒதுக்கப்பட்ட தொகைக்கு அப்பால் சட்டவிரோதமான முறையில் பணம் பயன்படுத்தப்பட்டதாகவும் தற்போது தெரியவந்துள்ளது.

அன்றைய காலகட்டத்தில், மாதிரி கிராமத் திட்டம், விநியோகக் கடன் திட்டம், "கிராம சக்தி பரவல் உதவி", விருமிதுரு, சிறுநீரக உதவி, வடக்கில் வெள்ளத்தால் ஏற்பட்ட வீடுகளைச் சீரமைக்க உதவி என பல வீட்டுத் திட்டங்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் போலி மருந்து வியாபாரம் தொடர்பில் அரசியல் அரங்கில் ஏற்பட்டுள்ள விவாதத்தை தொடர்ந்து இந்த உள்ளக கணக்காய்வு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக தற்போது தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா-உக்ரைன் போரில் சிக்கியுள்ள இலங்கையரை மீட்பதில் புதிய சிக்கல்!

## சிலர் அந்நாட்டுக் குடியுரிமை பெற்றதால்

கொழும்பு, ஜூலை 09

**ரஷ்யா-உக்ரைன் போரில் சிக்கியுள்ள இலங்கை முன்னாள் படையினரை மீட்பதில் புதிய சிக்கல் உருவாகியுள்ளது.**

**ரஷ்ய படையில் இணைந்து கொண்ட ஒரு தொகுதி இலங்கையர்கள் ரஷ்ய குடியுரிமை பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

இவ்வாறு குடியுரிமை பெற்றுக்கொண்ட இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாரபூர்வமான வழிகளில் சிலர் ரஷ்ய குடியுரிமை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் சிலர் அந்நாட்டு கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சிலர் எதிர்வரும் மாதங்களில் ரஷ்ய குடியுரிமை பெற்றுக்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்ய பிரஜைகளை அந்நாட்டிலிருந்து இலங்கை அழைத்து வருவதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முடியாது என இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவில் கடமையாற்றி வரும் சில இலங்கையர்கள் நாடு திரும்புவது குறித்த யோசனைகளை நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பில் குடும்பத்தினருக்கு போதியளவு தெளிவு கிடையாது என இலங்கை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ரஷ்யாவில் போரில் இணைந்து கொண்டு உயிரிழந்த இலங்கையர்களது குடும்பங்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்க முயற்சித்து வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

(அ)

# நாளாந்த வேதன முறையில் எனக்கு உடன்பாடு இல்லை!

## கூறுகிறார் ஜீவன் தொண்டமான்



கொழும்பு, ஜூலை 09

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படையில் வேதனம் வழங்கப்படும் முறைமை மீது தனக்கு உடன்பாடு இல்லை என நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறை மாற்றப்படும் வரை தற்காலிகமாக 1,700 ரூபாய் நாளாந்த வேதனம் வழங்கப்படுவதை உறுதி செய்வதே தமது நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்ட தொழிலாளர்கள் தங்களது வேதன அதிகரிப்பை வலியுறுத்தி தொடர்ந்து ஆதங்கங்களை வெளிப்படுத்துவார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

எமது செய்திச் சேவைக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதேவேளை 1,700 ரூபாய் வேதனத்தை வழங்குமாறு கோரி பொகவந்தலாவை மற்றும் அக்கரப்பத்தனை ஆகிய பகுதிகளில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(அ)

# சம்பள உயர்வு வழங்கினால் நாட்டில் பண வீக்கம் உயரும்!

கொழும்பு, ஜூலை 09

அரசாங்க ஊழியர்கள் கோருவது போன்று சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டால் பாரியளவு பணவீக்கம் ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களை அதிகரித்தால் அவ்வாறு வழங்கப்படும் தொகைக்காக பணத்தை அச்சிட நேரிடும் என தொழிற்சங்கங்கள் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சமன் ரத்னப்பிரிய இந்த விடயத்தை தெரிவித்தார்.

பணம் அச்சிட்டால் மீண்டும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் எனவும்,இதனால் சம்பளங்களை அதிகரிப்பதில் எவ்வித பலனும் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பணத்தை அச்சிட்டு சம்பளங்களை அதிகரிக்க வேண்டுமாயின் அதனை தொழிற்சங்கங்கள் தெளிவாக குறிப்பிட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

(அ)

# ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு அனுமதியின்றி கொண்டுவரப்பட்ட ஆபிரிக்கக் காட்டுப் பூனை!



கொழும்பு, ஜூலை 09

உரிய அனுமதியின்றி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக கருதப்படும் ஆபிரிக்க காட்டுப் பூனையொன்று கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சரக்கு முனையத்தின் சுங்க அதிகாரிகளினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காட்டுப் பூனை இலங்கையில் காணப்படும் சிறுத்தையை ஒத்ததாக கருதப்படுகிறது.

குறித்த விலங்குகள் ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் செல்லப்பிராணியாக வளர்க்கப்படுவதாகவும், அதனால் சர்வதேச ரீதியில் இவற்றுக்கு அதிக கேள்வி நிலவுவதாகவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கண்டியைச் சேர்ந்த நபர் ஒருவரினால் இந்தக் காட்டுப் பூனை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் நிறைவடையும் வரை குறித்த காட்டுப் பூனை தெஹிவளை தேசிய மிருகக் காட்சிச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை சுங்கத்தின் பல்லுயிர், கலாசார மற்றும் தேசிய பாதுகாப்பு பிரிவு மற்றும் வன விலங்கு பாதுகாப்புத் திணைக்களம் இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு தற்காலிகமாக மின்பிறப்பாக்கி!

## அங்கஜன் இராமநாதன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 09

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கியை பெற்றுத்தருவதாக என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அண்மைய நாட்களாக தொடரும் சிக்கல் நிலை தொடர்பில் அங்கஜன் இராமநாதன் கவனம் செலுத்தியிருந்தார்.

இது தொடர்பில் ம கருத்து தெரிவித்த அவர்-

வைத்தியசாலையின் விபத்து மற்றும் சத்திர சிகிச்சைகள் பிரிவு உள்ளிட்ட பிரிவுகள் மின்சார மாற்றீடுகள் இல்லாததாலும், அதற்கான மின்பிறப்பாக்கிகள் வழங்கப்படாத நிலையாலும் மருத்துவ பயன்பாடுகள் அற்ற நிலையில் காணப்படுவதாக அறிய முடிந்தது.

இத்தகைய சூழலில் குறித்த பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்து வைத்தியர்களால் முன்னெடுக்கப்படும் பணிப்பகிஷ்கரிப்பை முடிவுக்கு கொண்டுவருவதன் அவசியத்தையும் உணர்ந்து, இந்த விடயம் தொடர்பில் ஆர்வலர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தேன்.

இதன்படி, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அரசாங்கத்தால் போதிய மின்பிறப்பாக்கி வசதிகள் வழங்கப்படும் வரை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கான மின்பிறப்பாக்கிகளை தற்காலிக ஏற்பாட்டில் பெற்றுக் கொடுக்க சிலர் முன்வந்துள்ளனர்.

இதனூடாக வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவுகள் உள்ளிட்டவற்றை இயங்குநிலைக்கு கொண்டுவந்து மக்களுக்கான வைத்திய சேவையை வினைத்திறனுடன் வழங்கமுடியும் எனக் கருதுகிறேன்.

எனவே இதுதொடர்பில் வைத்தியசாலையின் தற்போதைய பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ராமநாதன் அர்ச்சுனா, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் ஆறுமுகம், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சமன் பத்திரன மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆகியோரின் பதிலுக்காக காத்திருக்கிறேன்-என்றார்.

(அ)

# அஸ்வெசும வேலைத்திட்டம் தொடர்பான கடமையிலிருந்து விலகும் அரச அதிகாரிகள்!

கொழும்பு, ஜூலை 09

நேற்று முதல் 'அஸ்வெசும' வேலைத்திட்டம் தொடர்பான சகல கடமைகளில் இருந்தும் விலகுவதாக இலங்கை பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

"அஸ்வெசும" இரண்டாம் கட்ட நலத்திட்ட உதவித் தொகை விண்ணப்பங்கள், வீட்டுமனைகள் கணக்கெடுப்பு, அதிகாரிகளுக்கு பணம் செலுத்துதல் உள்ளிட்ட பல பிரச்னைகள் காரணமாக ஒன்றிய தலைவருக்கு சங்கம் கடிதமொன்றினை அனுப்பி அறிவித்துள்ளது.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான அஸ்வெசும நிவாரணத் திட்டத்தின் இரண்டாம் கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனவே இரண்டாம் கட்ட விண்ணப்பங்களை பூர்த்தி செய்யாதவர்கள் அடுத்த வாரத்திற்குள் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மட்டக்களப்பு கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை 09

மட்டக்களப்பு செட்டிபாளையம் கடற்கரையில் அடையாளம் தெரியாத பெண் ஒருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளதாக பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் உடலை மீட்டனர்.

ஆயினும் அது அடையாளம் காணப்படவில்லை எனவும் நீதிமன்ற அனுமதியை பெற்று உடலை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறிச்சோடியது போராட்டக்களம்



கல்முனை, ஜூலை 09

**கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் 105 நாட்களுக்கு மேலாக கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த நிலையில் நேற்று போராட்டக் களம் வெறிச்சோடிக் காணப்பட்டது.**

குறித்த பிரதேச செயலகத்தின் முன்பாக கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாகைகளை தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்று கூடி போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் 105 நாட்களுக்கு மேலாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர். ஆரம்பத்தில் அதிகளவான மக்கள் ஆர்வத்துடன் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் கடந்த சில தினங்களாக குறைந்தளவான மக்களே குறித்த போராட்டத்தில் பங்கேற்று வந்தனர். சில வேளை மக்கள் எவரும் இன்றி போராட்டக் களம் வெறிச்சோடி காணப்படுவதையும் அவதாகிக்க முடிகின்றது.

இது தொடர்பில் போராட்ட ஏற்பாட்டாளர்களிடம் வினவியபோது, மக்கள் தற்போது கதிர்காமத்துக்கான பாத யாத்திரையை மேற்கொண்டுள்ளமையால் குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. எனினும், எதிர்காலத்தில் அதிகளவான மக்கள் போராட்டத்தில் இணைந்து கொள்வார்கள் என்றனர். (எ)



# திருகோணமலையில் அரச சேவை முடக்கம்

## பொதுமக்கள் அவதி!

திருகோணமலை, ஜூலை 09

நாடளாவிய ரீதியில் நேற்று தொழிற்சங்க சுகவீன விடுமுறை காரணமாக அரச சேவைகள் முடங்கிக் காணப்பட்டதுடன் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கியுள்ளனர். அந்த வகையில், திருகோணமலை மாவட்டத்திலும் அரச சேவைகள் முடங்கியுள்ளன.

சம்பள அதிகரிப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 200 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் சுகவீன விடுமுறையை அறிவித்து பணிப்பகிஷ்கரிப்பில் நேற்றும் இன்றும் ஈடுபட்டுள்ளன. இதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். (எ)

# மலேசிய பாராளுமன்று ஆளுநருக்கு அழைப்பு!

திருகோணமலை, ஜூலை 09

மலேசிய பாராளுமன்றத்துக்கு வருமாறு கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



இலங்கையில் மூவின மக்களுக்கும் பாரபட்சம் இன்றி சிறந்த தலைமைத்துவத்தை வழங்கும் தலைவர் என்ற ரீதியில் ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு இந்த விசேட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மலேசியா பல்லின மக்கள் வாழும் ஒரு நாடு, அங்குள்ள இந்திய வம்சாவழி தமிழர்களுடன், மூவின மக்களும் ஒன்றாக வாழ தான் முன்னெடுத்த வழிமுறைகள் குறித்தும், தனது தலைமைத்துவப் பண்புகள் மற்றும் தொடர் வேலைத்திட்டம் குறித்து கலந்துரையாட அழைப்பு விடுக்கப்பட்டதையடுத்து நேற்று செந்தில் தொண்டமான் மலேசியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார். (எ)

# கடலில் மூழ்கிய 6 பேர் மீட்பு

திருகோணமலை, ஜூலை 09

திருகோணமலை, நிலாவெளி கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த ஆறு பேர் திருகோணமலை பொலிஸ் உயிர் காப்புப் பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

கண்டி, பிலிமதலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 16 முதல் 28 வயதுக்குட்பட்ட அறுவரே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் நிலாவெளி கடலில் நீராடிக்கொண்டிருக்கும் போது திடீரென நீரில் மூழ்கியுள்ள நிலையில், அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் இவர்களை காப்பாற்றியுள்ளனர்.

காப்பாற்றப்பட்டவர்களில் ஒருவர் சிகிச்சைக்காக நிலாவெளி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)


# கல்முனை சுகாதார சேவை பணிப்பாளர் கௌரவிப்பு

கல்முனை, ஜூலை 09

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் கடந்த மே மாதம் உணவுப் பாதுகாப்பு மாதமாகவும், கடந்த ஜூன் மாதம் 24 - 29 வரை ஒரு வார காலம் கை கழுவுதல் விழிப்புணர்வு வாரமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டு பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்துறை மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவினால் கல்முனை பிராந்தியத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்கிய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் நேற்று பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்துறை மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்துறை மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரி ஏ. எஸ். எம்.



பௌசாத், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ. எல். எம். லபீர், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ். ஜீவராஜா மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதுரியா பானு ஆகியோர் இணைந்து பணிப்பாளரை பாராட்டி கௌரவித்தனர்.

இந்த நிகழ்வின்போது பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ)

# கூடைபந்தாட்ட போட்டியில் பற்றிமா கல்லூரி சம்பியன்

கல்முனை, ஜூலை 09

இலங்கை கூடைபந்தாட்ட சம்மேளத்தால் நடத்தப்பட்ட கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுக்கு உட்பட்ட மகளிர் கூடைபந்தாட்டப் போட்டியில் கல்முனை கார்மல் பற்றிமா தேசிய கல்லூரி அணி சம்பியனானது.



இந்த அணியினர் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

குறித்த மாணவிகளின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த உடற்கல்வி ஆசிரியர் திருமதி .ஹயாளினி சிவாகரன், பயிற்றுவிப்பாளரான க. தரிஷாந்தன், வெற்றியீட்டிய மாணவிகளுக்கும் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து பெற்றோர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பில் வாழ்த்துகளும் பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டன. (எ)

# லண்டன் செல்கிறார் திருமலை மாணவன்

திருகோணமலை, ஜூலை 09

திருகோணமலை இராமகிருஷ்ணமிஷன் சிறீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் கஜச்செல்வன் அஷ்வின் லண்டனில் நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

2022 ஆம் ஆண்டு தரம் - 6 இல் கல்வி கற்ற போது கணித ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று லண்டன் செல்லும் வாய்ப்பைப் பெற்றார்.

அந்தவகையில் 10 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் லண்டனில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் தேசிய மட்டத்தில் நடைபெற்ற கணித ஒலிம்பியாட் போட்டியில் பிரிவு - 2 இல் இரண்டாம் இடத்தைப் பெற்று இந்தியாவின் லக்னோ நகரில் 25. 07. 2024 தொடக்கம் 01. 08. 2024 காலப் பகுதியில் நடைபெறும் சர்வதேச மட்டப் போட்டியில் இலங்கை சார்பாக பங்கேற்கும் 12 பேர் கொண்ட குழுவிலும் மாணவன் அஷ்வின் பங்குபற்றவுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மக்கள் தஞ்சமடைந்திருந்த பாடசாலை மீது தாக்குதல்!

## காஸாவில் 15 பேர் பலி!

காஸா, ஜூலை 09

**காஸாவில் இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சமடைந்திருந்த பாடசாலைமீது இஸ்ரேல் படைகள் மேற்கொண்ட மூர்க்கத்தனமான தாக்குதலில் சிறுவர்கள், பெண்கள் உட்பட 5 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.**

புழுதியும் இடிபாடுகளும் நிறைந்து காணப்படும் புகை மண்டலம் நிறைந்த வீதியில் பொதுமக்கள் அலறுவதை காண்பிக்கும் காணொலிகள் வெளியாகியுள்ளன.

7,000 பேர் இந்தப் பாடசாலை கட்டடத்தில் அடைக்கலமடைந்திருந்தனர். குர் ஆன் ஓதிக்கொண்டிருந்தவேளை தாக்குதல் இடம்பெற்றது. சிறுவர்கள் பலர் கொல்லப்பட்டனர் என பெண்ணொருவர் கூறினார். இஸ்ரேல் படைகள் இந்தப் பாடசாலையை முன்னெச்சரிக்கையின்றி இலக்குவைப்பது இது நான்காவது தடவை என அந்தப்பெண் கூறினார். (எ)

# லெபனானிலிருந்து இஸ்ரேல் மீது 20 ரொக்கெட்கள் வீசித் தாக்குதல்

டெல் அவிஸ், ஜூலை 09

லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது 20 ரொக்கெட்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் போராளிகள் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி அதிரடித் தாக்குதல் நடத்தினர்.

இந்த நிலையில், இஸ்ரேலுக்கு எதிராக ஹிஸ்புல்லா அமைப்பும் தாக்குதல் நடத்தி வருகிறது. லெபனான் நாட்டிலிருந்து இந்தத் தாக்குதல் நடத்தப்படுகிறது.

இஸ்ரேலும் பதில் தாக்குதலை தொடுத்து வருகிறது. இந்தச் சூழலில், இஸ்ரேலின் வடபகுதியில் லோயர் கலிலீ என்ற இடம் நோக்கி லெபனான் நாட்டிலிருந்து ஹிஸ்புல்லா அமைப்பினர் நேற்றுக் காலை ரொக்கெட்களை ஏவி தாக்குதல் நடத்தினர்.

இதனை இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். எனினும், இவற்றில் சில ரொக்கெட்களை இஸ்ரேல் பாதுகாப்புப் படையினரின் வான் பாதுகாப்புப் பிரிவினர் தடுத்து நிறுத்தி முறியடித்தனர்.

இதேவேளை, ரொக்கெட் மற்றும் ஆளில்லா விமானம் மூலம் வடஇஸ்ரேலின் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் பெரியளவில் நடத்திய தாக்குதலில், இஸ்ரேல் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் பலியானார். தங்களுடைய படைத் தளபதிகளில் ஒருவர் உயிரிழந்த நிலையில், ஹிஸ்புல்லா அமைப்பினரின் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தெற்கு லெபனான் பகுதியில் இஸ்ரேல் படையினர், 200 ரொக்கெட்கள் மற்றும் வெடிகுண்டுகளை சுமந்து செல்லும் 20 ஆளில்லா விமானங்களை கொண்டு தாக்குதல் நடத்தினர்.

இதனால் அங்கு போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது. (எ)

# மோடியின் வருகையைக் கண்டு பொறாமைப்படும் மேற்கு நாடுகள்

## ரஷ்ய ஜனாதிபதி மாளிகை

மொஸ்கோ, ஜூலை 09

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகை மேற்கு நாடுகளுக்குப் பொறாமையை ஏற்படுத்தியுள்ளது என்று ரஷ்ய ஜனாதிபதி மாளிகை தெரிவித்துள்ளது.

இந்தியா - ரஷ்யா இடையே ஆண்டு தோறும் உச்சி மாநாடு நடக்கிறது. இதில் இரு நாட்டு தலைவர்களும் பங்கேற்று இரு தரப்பு பேச்சுகளை நடத்தி உறவுகளை வலுப்படுத்தி வருகின்றனர். அந்த வகையில் இம்முறையும் இரு நாட்டு உச்சி மாநாடு மொஸ்கோவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் பங்கேற்க வருமாறு பிரதமர் மோடிக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்திருந்தார்.

அந்த அழைப்பை ஏற்று பிரதமர் மோடி ரஷ்யா வந்துள்ளார்.

இந்த நிலையில் பிரதமர் மோடியின் ரஷ்ய பயணத்தை மேற்கு நாடுகள் உன்னிப்பாகவும், பொறாமையுடனும் கவனித்து வருகின்றன. ரஷ்ய - இந்திய உறவுகளுக்கு பிரதமர் மோடியின் வருகை மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கும் என்று ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறினார். (எ)

# வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி நேபாளத்தில் 14 பேர் மரணம்

காத்மண்டு, ஜூலை 09

நேபாளத்தில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி இதுவரை 14 பேர் உயிரிழந்தனர்.

நேபாளத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த 4 நாட்களாக தொடர் கனமழை பெய்து வருகிறது. இதனால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. மேலும் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் இதுவரை 14 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 9 பேர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்களை மீட்கும் பணியில் பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# சிட்னியில் வீட்டில் தீ! சிறுவர்கள் மூவர் பலி

## தடுக்க முயன்ற தந்தை கைது

சிட்னி, ஜூலை 09

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரின் மேற்கில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று சிறுவர்கள் பலியான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தந்தையை கைது செய்துள்ள பொலிஸார் இது குடும்ப வன்முறைச் சம்பவமாக இருக்கலாம் எனக் கூறியுள்ளனர்.

இரண்டு மற்றும் நான்கு வயதுச் சிறுவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தனர்.

பத்து மாத பெண் குழந்தையின் உடல் தீ அணைக்கப்பட்ட பின்னர் மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

ஒன்பது வயது சிறுமியையும் மூன்று சிறுவர்களையும் அவர்களின் தாயாரையும் மருத்துவனையில் அனுமதித்துள்ளோம் என தெரிவித்த பொலிஸார் தீயில் சிக்குண்டவர்களைக் காப்பாற்றுவதைத் தடுக்க முயன்ற 29 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் இந்த பிள்ளைகளின் தந்தை என பொலிஸார் உறுதி செய்துள்ளனர். (எ)

# பதவிக்காலம் முடிந்ததும் எளிமையாக வெளியேறிய முன்னாள் பிரதமர் மார்க்

ஆம்ஸ்டர்டாம், ஜூலை 09

14 ஆண்டுகள் நெதர்லாந்து பிரதமராக பதவி வகித்த மார்க் ரூட், துவிச்சக்கர வண்டியில் மிகவும் எளிமையாக பிரதமர் அலுவலகத்தை விட்டு வெளியேறினார்.

நெதர்லாந்தில் கடந்த 14 ஆண்டுகளாக பிரதமராக பதவி வகித்தவர் மார்க் ரூட். இவர் ஒரு வலதுசாரி ஆதரவாளர். இந்த நிலையில் மார்க் ரூட், வரும் ஒக்டோபர் மாதம் நேட்டோ பொதுச் செயலாளராகப் பதவியேற்கவுள்ளார். முன்னதாக, தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்திருந்த நிலையில், அடுத்த நெதர்லாந்து பிரதமராக டிக் ஸ்கூப் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு, அந்த நாட்டு மன்னர் வில்லியம் அலெக்சாண்டர் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

தி ஹேக் நகரில் நடைபெற்ற இந்தப் பதவியேற்பு விழாவில், அவருடன் அமைச்சர்களும் பதவி ஏற்றுக்கொண்டனர். இந்த விழாவில் கலந்துகொண்ட



மார்க் ரூட், அனைவருக்கும் நன்றி தெரிவித்தபடி பிரதமர் அலுவலகத்தைவிட்டு துவிச்சக்கர வண்டியில் மிகவும் எளிமையாக வெளியேறினார். (எ)

# அமெரிக்காவில் துப்பாக்கி சூடு!

வாஷிங்டன், ஜூலை 09

அமெரிக்காவில் நாளுக்கு நாள் துப்பாக்கிச் சூடு, கத்திக்குத்து உள்ளிட்ட வன்முறை தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில், அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணம் டிட்ரியோட் நகரில் வார விடுமுறை நாளான நேற்று முன்தினம் இரவு அடுக்குமாடி [illegible]ருப்பிலுள்ள ஒரு வீட்டில் கேளிக்கை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 20 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அப்போது, கேளிக்கை நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இந்தத் துப்பாக்கி சூட்டில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும், 19 [illegible] (எ)

# பிரான்ஸில் இடதுசாரி கூட்டணி அதிக இடங்களை கைப்பற்றும்

## தேர்தலுக்கு பிறகு கருத்துக்கணிப்பில் தகவல்

பாரிஸ், ஜூலை 09

பிரான்ஸில் இடதுசாரி கூட்டணி அதிக இடங்களைக் கைப்பற்றும் என்று தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பில் தகவல் வெளியாகியுள்ளது.

பிரான்ஸ் பாராளுமன்றத் தேர்தல் ஜூன் 30 மற்றும் ஜூலை 7 ஆம் திகதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. 577 உறுப்பினர்களைக் கொண்ட பிரான்ஸ் பாராளுமன்றத் தேர்தல் ஐரோப்பாவில் நடைபெறும் முக்கிய தேர்தலாக பார்க்கப்படுகிறது.

இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் மையவாத கூட்டணி, வலதுசாரி கூட்டணியான தேசிய பேரணி கூட்டணி, இடதுசாரி கூட்டணியான நியூ பாப்புலர் பிரண்ட் கூட்டணி போட்டியிட்டன. இதில், மரீன் லி பென் தலைமையிலான வலதுசாரி கூட்டணி வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பில் பிரான்ஸில் இடதுசாரி கூட்டணி அதிக இடங்களைக் கைப்பற்றும் எனத் தெரியவந்துள்ளது. இடதுசாரி கூட்டணியின் முக்கிய தலைவராக ஜீன் லூக் மெலன்சொன் உள்ளார். அதேவேளை, இடதுசாரி அதிக இடங்களை கைப்பற்றியபோதும் பாராளுமன்றத்தில் ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மை கிடைக்காது என தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது. இதன் மூலம் தொங்கு பாராளுமன்றம் உருவாகும் சூழ்நிலை ஏற்படலாம்.

தேர்தலில் பின்னடைவை சந்தித்துள்ள ஆளும் மையவாத கூட்டணியின் பிரதமர் கேப்ரியல் அட்டல் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பில் இடதுசாரி கூட்டணி அதிக இடங்களைக் கைப்பற்றும் எனத் தெரிவிக்கப்பட்டபோதும், எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளதால் பிரான்ஸில் அரசியல் குழப்பம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடர்களின் சதி முறியடிக்கப்படும்!

## சஜித் பிரேமதாஸ சூளுரை

கொழும்பு, ஜூலை 09

**அரசியலமைப்பில் உள்ள ஓட்டைகள் ஊடாக பதவியைத் தக்கவைத்துக்கொள்ள தற்போதைய ஜனாதிபதிக்கு வாய்ப்பில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

கம்பஹாவில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பில் உள்ள ஓட்டைகளை ஆராய்வதை தற்போதைய ஜனாதிபதியின் சீடர்கள் கடமையாகக் கொண்டு செயற்பட்டு வருகிறார்.

அவருக்கு மக்களாணை என்பது கிடையாது.

அவர் திருடர்களைப் பாதுகாக்கும் பணிகளையே முன்னெடுத்துள்ளார்.

சிலருக்கு அதிகாரம் இல்லாமல் உறக்கம் வருவதில்லை.

அவ்வாறானவர்கள் பல சதிகளை முன்னெடுத்து ஆட்சியைத் தக்க வைக்க முயல்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு அவ்வாறான எந்தத் தேவையும் இல்லை.

எமக்கு திருடர்களுடன் எந்தக் கொடுக்கல் வாங்கலும் இல்லை.

மக்களின் சக்தியே எமது பலம் எனவும் திருடர்களின் சதிகள் முறியடிக்கப்படும்-என்றார். (அ)

# தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமை சம்பந்தர்

## யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 09

ஈழத்தமிழர்களின் அரசியல் வேணவாக்களை மிதவாதப் போக்குடன் கையாண்ட தலைவர்களுள் மிக முக்கியமானவர் காலஞ்சென்ற இரா.சம்பந்தன் அவர்கள். இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னர் ஈழத்தமிழர்கள் முன்வைத்த அரசியல் கோரிக்கைகளை முன்கொண்டு சென்றதில் சம்பந்தர் அவர்களின் பங்களிப்பும் கனதியான இடத்தை வகிக்கின்றது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பெருந் தலைவர் இரா. சம்பந்தனின் மறைவு குறித்து யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

ஈழத்தமிழர் போராட்டத்துக்கு முன்னான அரசியல், போராட்ட காலத்திலான அரசியல், போராட்டத்துக்குப் பின்னான அரசியல் என மூன்று தளங்களிலும் சர்வதேசத்தால் நன்கு அறியப்பட்ட அரசியல் தலைவர் இரா.சம்பந்தர் ஆவார்.

அவரது தலைமைத்துவத்தில் தமிழ்த் தேசிய பரப்பில் பல சவால்கள் எதிர் கொள்ளப்பட்டுள்ளன. சவால்கள் தோன்றும் போதெல்லாம் அவற்றின் உடனடி விளைவுகளை மையப்படுத்தி தீர்வுகளை அணுகாது தனது மென்போக்கு அணுகுமுறையினால் சவால்களை மாற்று வழிகளில் கையாண்டவர் அவர். அந்தப் போக்கு அவரது தனித்துவ இயல்பாக மற்றவர்களால் கணிக்கப்பட்டது.

குடியரசுக் காலத்துக்குப் பின்னர் இலங்கைப் பாராளுமன்றத்தில் அதிக காலம் அங்கத்துவம் வகித்த தமிழ்த் தலைவர் எனும் பெருமையையும் இரண்டாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் எனும் பெருமையும் அவர் பெறுகின்றார். ஈழத் தமிழர்களின் வாழ்வியல் பூர்விகமான வடக்கு கிழக்கு மண்ணை இணைத்து இரண்டு தரப்புக்களும் மதிப்புணர்வுடன் அணுகிய தலைவராக பார்க்கப்படுகிறார்.

இன்று காலமூப்பினால் அவர் இவ்வுலக வாழ்வை நீத்துள்ளார். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் சார்பிலான அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்-என்றுள்ளது. (அ)

# இளைஞர் சங்கங்களை வலுவூட்ட வேலைத்திட்டம்

கொழும்பு, ஜூலை 09

நாடளாவிய ரீதியில் உள்ள இளைஞர் சமூகத்தை மீண்டும் உற்சாகப்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கீழ்மட்டத்திலுள்ள இளைஞர்,யுவதிகளின் வளர்ச்சிக்காக அணிதிரட்டுவது தான் இதன் நோக்கம். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கோரிக்கைக்கு அமைய கம்பஹா மாவட்டத்தில் இருந்து இதனை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இம்மாத இறுதிக்குள் இந்த வேலைத்திட்டத்தை கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்தார். கம்பஹா மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தேசிய இளைஞர் சேவை மன்றம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணப்படி தேசிய இளைஞர் சேவை மன்றம் ஸ்தாபிக்கப்பட்டது. அன்றைய தினம் ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் சேவை மன்றத்தின் ஊடாக இளைஞர் கழகங்களின் ஊடாக இளைஞர்களுக்கு பல பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது நாங்கள் எதிர்கட்சியில் இருந்த போதும் இளைஞர் சேவை மன்றத்தின் மூலம் பாரிய அளவிலான பணிகளை நிறைவேற்ற முடிந்தது. இளைஞர்களின் ஆற்றலை வீதியில் இறக்காமல் நாட்டின் பொருளாதாரத்தில் பயன்படுத்த முடிந்தது. அப்போது அரசியல் இருக்கவில்லை. நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் யுத்த காலத்தில் இளைஞர் சமூகங்களை ஒன்றிணைத்து போர் வீரர்களுக்கு வீடுகளை வழங்கினோம். தொழில்முனைவோரை உருவாக்குவதற்கான திட்டங்களை செயல்படுத்தினோம். துரதிஷ்டவசமாக கடந்த காலங்களில் இளைஞர்களை ஒன்று திரட்டி நடைமுறைப்படுத்திய திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியவில்லை. இன்றைய இளைஞர்கள் சில அரசியல்வாதிகளின் கைக்கூலிகளாக மாறிவிட்டனர். அதை தடுத்து நிறுத்த இளைஞர் சமூக இயக்கம் புத்துயிர் பெற வேண்டும். அதனால் தான் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது-என்றார். (அ)



# பெருந்தொகையான பீடி இலைகளுடன் மன்னார், வங்காலையில் மூவர் கைது!

மன்னார், ஜூலை 09

மன்னார், வங்காலை பகுதியில் 2 ஆயிரத்து 888 கிலோகிராம் பீடி இலைகளைக் கடத்திச் செல்ல முயன்ற மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்தே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது 80 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 2 ஆயிரத்து 888 கிலோ பீடி இலைகளை பொலிஸார் கைப்பற்றினர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபர்களை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# இரா. சம்பந்தனுக்கு நெடுந்தீவில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 09

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனுக்கு நேற்று முன் தினம் நெடுந்தீவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அந்தக் கட்சியின் பணிமனையில் நெடுந்தீவு கிளைச் செயலாளர் வி. ருத்திரன் தலைமையில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வண போதகர் யூட் எழில் அமுதன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பரமேஸ்வரி, கட்சியின் நெடுந்தீவு கிளை உபதலைவர் மைக்கல் யேசுதாஸன், கட்சியின் நெடுந்தீவு கிளை உபசெயலாளர் சுதன் மற்றும் ஆதரவாளர்கள் பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# உயர்கல்வி நிறுவனங்களில் கற்கைநெறிகளை தொடர்வதற்கு மாணவருக்கு வட்டியில்லா கடன்

கொழும்பு, ஜூலை 09

2022 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் கற்கைநெறிகளை தொடர்வதற்கு வட்டியில்லா கடன் வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உயர்தரம் சித்தியடைந்தும் அரச பல்கலைக்கழகங்களுக்கு நுழைவதற்கு வாய்ப்பு கிடைக்காத மாணவர்களுக்காக இந்த வட்டியில்லாக் கடன் திட்டம் நடைமுறைப்ப டுத்தப்படவுள்ளது.

அத்தோடு, அதிகபட்சமாக 8 லட்சம் ரூபாய் வரை வட்டியில்லா கடன் பெற்றுக்கொடுக்கப்ப டவுள்ளது. கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 17 அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் 100 பட்டப்படிப்புகளை கற்பதற்கு ஏழு மாணவர் குழுக்களின் கீழுள்ள 17,313 மாணவர்களுக்கு ஏற்கனவே கடன் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், 2022 ஆம் ஆண்டு உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் இந்தக் கடன் திட்டத்தின் 8 ஆவது தொகுதியாக உள்வாங்கப்படவுள்ளதுடன், அது தொடர்பாக அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் வழங்கப்படவுள்ள கற்கைநெறிகள் தொடர்பான முன்மொழிவுகள் தற்போது அழைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# மீன் தொட்டியில் விழுந்து 3 வயது சிறுவன் மரணம்!

கொழும்பு, ஜூலை 09

மீன் வளர்க்கும் தொட்டியில் விழுந்து 3 வயதான சிறுவனொருவன் உயிரிழந்த சம்பவம் மித்தெனிய, கிழக்கு விக்கிரம மாவத்தை பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினமான நேற்று முன் தினம் குறித்த சிறுவன் தனது வீட்டின் முன்பாக விளையாடிக்கொண்டிருந் தவேளை எதிர்பாராத விதமாக மீன் வளர்ப்பதற்காக கட்டப்பட்டிருந்த தண்ணீர்த் தொட்டியில் தவறி விழுந்து உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்த மேலதிக விசாரணைகளை மித்தெனிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோணேஸ்வரர் ஆலயத்திற்கு விஜயம் செய்த அண்ணாமலை

திருமலை, ஜூலை 09

பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை நேற்று திருக் கோணேஸ்வரர் ஆலயத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

மறைந்த தமிழரசு கட்சியின் பெருந்த லைவர் இரா.சம்பந்தனின் இறுதி நிகழ் வில் பங்கேற்பதற்காக இலங்கை வந்த அண்ணாமலை சம்பந்தனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன் இறுதி நிகழ் விலும் பங்கேற்றார்.

இந்நிலையில் நேற்றுக் காலை திரு கோணமலை திருக்கோணேஸ்வரர் ஆல யத்திற்கு விஜயம் செய்த அண்ணாமலை அங்கு பூஜை வழிபாடுகளிலும் கலந்து கொண்டார்.

திருக்கோணேஸ்வரர் ஆலய விஜயம் தொடர்பில் அண்ணாமலை தனது முகநூலில் பதிவொன்றை இட்டுள்ளார்.

குறித்த பதிவில்,

இலங்கையின் முக்கிய பஞ்ச ஈஸ்வர கோயில்களில் ஒன்றாகும். மேலும் ராமாயண யாத்திரைச் சுவடுடன் இணைக் கப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தற்றுக், சுந்தரர் தங்கள் ஸ்தோத்திரங்களில் திரு கோயிலை குறிப்பிட்டுள்ளனர்.

சிவபெருமானின் அறிவுறுத்தலின் பேரில் ரிஷி அகஸ்தியரால் கட்டப்பட்ட கோயிலை இராமாயணம், ராமேஸ்வரத் திற்குப் பிறகு பிரம்மஹஸ்தி தோஷத்தி லிருந்து விடுபட இரண்டாம் லிங்கத்தை கட்டியது.

16ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகியர் கள் அழிந்ததைத் தூண்டுதலாக, இன் றும் சனாதன தர்மத்திற்கும் இந்து மதத் தின் ஆவிகளுக்கும் சான்றாக உயர்ந்து நிற்கிறது கோவில்- என பதிவிட்டுள்ளார்.

(அ)

# ஜனநாயகத்தில் கை வைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி முறியடிப்பு!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு




கொழும்பு, ஜூலை 09

ஜனநாயகத்தில் கைவைப்பதற்கு எடுக் கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள் ளது. நீதிமன்றம் சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. எனவே நேரத்தில் தேர் தலை நிச்சயம் நடத்த வேண்டிய நிர்பந் தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரி வித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலை வர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தேர்தலை நடத்தாமலிருப்பதற்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற் சிக்கின்றார். ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளரும், தவிசாளரும் தொடர்ந்தும் இவ்வாறான கருத்துக் களை தெரிவித்து வந்தனர். ரணில் விக்கி ரமசிங்க மாத்திரமே வேட்பாளர் என ஒரு சந்தர்ப்பத்தில் கூறிவந்தவர்கள், பின்னர் தேர்தல் நடத்தப்படக் கூடாது எனக் கூற ஆரம்பித்துவிட்டார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலும் இதே உத்தியையே பின்பற்றினர். தேர்த லுக்கான பணத்தை வழங்குமாறு நீதிமன் றத்தால் நிதி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால் நீதிமன்ற தீர்ப்பையும் கவனத்தில் கொள்ளாது உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலம் தாழ்த்தியுள்ளனர். ஜனாதிபதித் தேர்த லுக்கான தினத்தை அறிவிக்கும் அதிகா ரம் இன்னும் 10 நாட்களில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும்.

ஆணைக்குழுவுக்கு அந்த அதிகாரம் கிடைப்பதற்கு முன்னர் இவ்வாறு நீதிமன் றம் சென்றுள்ளனர். எனினும் நீதிமன்றம் சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. ஜன நாயகத்தில் கைவைப்பதற்கு எடுக்கப் பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டுமெனில் ஜனாதிப தித் தேர்தல் நிச்சயம் நடத்தப்பட வேண் டும் - என்றார்.

(அ)

## சாவகச்சேரி...

முன்னெடுக்கப்பட் டது.

இந்நிலையில் நேற்று வைத்திய அத் தியட்சகர் வெளியேறிச் சென்றதைய டுத்து வைத்தியசாலை முன்பாக நடை பெற்ற ஆர்ப்பாட்டமும் நிறைவுக்கு வந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரு டன் கலந் துரையாடிய வைத்தியர் அர்ச் சுனா, தானே தற் போதும் வைத்திய அத்தி யட்சகர் எனவும் தற் போது சுக வீன விடுமுறை யில் இருப்பதாகவும், குறித்த நிலைமை தொடர் பில் பேச்சு நடத்துவதற் காக கொழும்புக்குச் செல் வதாகவும் தெரிவித்து விட்டு வெளியே றினார்.

இதேவேளை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தி யட்சகரை மாற்றக் கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரச ஊழியருக்கு...

தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரைகளைக் கருத் திற் கொண்டு அடுத்த வருடத்திற்கான பாதீட்டில் அரச ஊழியர்களின் வேதனம் குறித்து மீளாய்வு செய்ய எதிர்பார்க்கப் படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

(அ)

## மேலும் 14...

அளவை சேவைகள் இந்த 14 இல் உள் ளன. எனவே, 14 இன் மூலம் பதிவு செய் யப்பட்ட அனைவரின் வருமானம் குறித் தும் உள்நாட்டு வருமான வரித் திணைக் களம் தெளிவான விசாரணை ஒன்றை நடத்தி வருகிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

## ஜனாதிபதி தேர்த...

மனுக்களும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

மனுதாரர் வழக்கு கட்டணமாக ஒரு லட்சம் ரூபாவை செலுத்தவேண்டும்.

இந்நிலையில் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்தாண்டுகளே என சட்டமா அதிபர் நேற்று உயர்நீதிமன்றத்திடம் சுட்டிக்காட்டி இருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

(அ)

## ஜனாதிபதி பதவி...

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் தெளிவூட்டும் வரை, அடுத்த ஜனாதிப தித் தேர்தலை நடத்துவதற்கு இடைக்கா லத் தடை உத்தரவினைப் பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

## மூடப்பட்டது...

பொதுமக்கள் வீதியை விட்டு விலகி வீதியோரமாக தொடர்ச்சியாக போராட் டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸாருடன் இணைந்து கலகம டக்கும் பொலிஸார், விசேட அதிரடிப் படையினரும் வைத்தியசாலையில் குவிக் கப்பட்டனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யின் பதில் அத்தியட்சகர் பதவியில் இருந்து வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை இடமாற்றும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்தியசாலை முன்பாக நேற்று முன் தினம் இரவு ஆரம்பித்த இந்த கண்டன ஆர்ப்பாட்டம் அதிகளவிலான மக்களின் பங்கேற்புடன் நேற்று நண்பகல் வரை நடைபெற்றது.

(அ)

## ரணிலுடன்...

தேர்தலில் வேட்பாளராக முன்னிறுத் தப்படுவதற்குத் தகுதியானவர் ரணில் விக்ரமசிங்கவே என பொதுஜன பெரமு னவில் உள்ள சில பாராளுமன்ற உறுப்பி னர்கள் மற்றும் அமைச்சர்கள் தெரிவித்த போதிலும், ஜனாதிபதி தேர்தலில் போட் டியிடப் போவதாக எமதுக் கட்சிக்கு அவர் அறிவிக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொதுஜன பெரமுனவில் இடம்பெற்று வரும் கலந்துரையாடலில் ரணில் விக்கி ரமசிங்கவின் பெயர் குறித்து எவ்வித கலந் துரையாடல்களும் நடத்தப்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் பொருளா தாரக் கொள்கையானது சந்தையின் தேவைக்கேற்ப கையாளக்கூடிய பொரு ளாதாரம். அந்த பொருளாதாரக் கொள் கையின் பிரகாரம் நாட்டைப் பற்றியோ நாட்டு மக்களைப் பற்றியோ அவருக்கு அக்கறை இல்லை.

ஜனாதிபதியின் பொருளாதார கொள் கையின் அடிப்படையில் அவருடன் அரசியல் பயணத்தை மேற்கொள்வதற்கு பொதுஜன பெரமுன இணக்கம் வெளி யிடாது-என்றார்.

(அ)

## அநீதியான...

செயல்படுத்தப்பட்டன. பாராளுமன்றத் தில் பல சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட் டுள்ளதுடன் மேலும் சில சட்டமூலங் களை முன்வைக்கவும் எதிர்பார்க்கப்படு கிறது.

மேலும், உலக வங்கியின் ஆதரவுடன், 2020-2030 டிஜிற்றல் பொருளாதாரத் திட்டம் வெளியிடப் பட்டது. தற்போ தைய 03 பில்லியன் அமெரிக்க டொலர் டிஜிற்றல் பொருளாதாரத்தை 2030 ஆம் ஆண்டிற்குள் 30 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதே எமது நோக்கமாகும்.

பாராளுமன்றத்தில் தொலைத்தொ டர்பு சட்டத்தில் திருத்தங்களை முன் வைக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சட்டத்தை 28 ஆண்டுகளுக்குப் பிறகு திருத்த எதிர்பார்க்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நுகர்வோரைப் பாதுகாப்பதுடன் தொலைபேசி நிறுவனங்களுக்கு இடை யிலான போட்டியை நியாயமான போட் டியாக மாற்றுவது இதன் நோக்கங்களில் ஒன்றாகும். முன்பு, இந்த சட்டம் தொலைத் தொடர்பு கட்டமைப்பு அனுமதிப்பத்தி ரத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டி ருந்தது. அதன்படி, திருத்தங்களுக்கு அங் கீகாரம் கிடைத்தவுடன் அனுமதிப்பத்தி ரம் வழங்கும் பொறிமுறையும் மாற்றம் அடையும்.

மேலும், எதிர்காலத்தில் செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணைய வசதிகளை வழங்கவும் எதிர் பார்க்கப்படுகிறது. கடல்வழி கேபிள் சேவைக்கான அனுமதிப் பத்திரம் மற் றும் ஒழுங்குபடுத்தலுக்கு நாங்கள் தயா ராகி வருகிறோம். இந்த ஆண்டு தொழில் நுட்ப மேம்பாட்டுச் சட்டத்தை முன்வைக் கவும் எதிர்பார்க்கின்றோம்.

மேலும், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆணைக் குழுவை நிறுவவும் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு செய் வதன் மூலம், நாட்டின் அனைத்து அபி விருத்தி மற்றும் புத்தாக்கங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும். ஆராய்ச்சி, வணிகமயமாக்கப்படுவதுடன் பரிந்து ரைகளை வழங்குவதும் இதன் மூலம் முன்னெடுக்கப்பட உள்ளது.

மேலும் தற்போதைய தொழில்சார் நடவடிக்கைகளின்படி அனைத்து அரச ஊழியர்களுக்கும் 20,000 ரூபா கொடுப் பனவு கோரப்பட்டுள்ளது. அந்த கொடுப் பனவை வழங்குவதற்கு வருடத்திற்கு சுமார் 280 பில்லியன் ரூபா மேலதிகமாக செலவு செய்ய வேண்டியிருக்கும். நாட் டின் தற்போதைய நிலைமையைக் கருத் தில் கொண்டு அந்த செலவுகளை எவ் வாறு ஈடுகட்டுவது என்பதை எதிர்க் கட்சி தெரிவிக்க வேண்டும்.

அத்துடன், தேர்தல் நெருங்கும் வேளை யில் அசாதாரண வகையில் போராட்டங் களை முன்னெடுத்தமையினால், பிள்ளை கள் கல்வி கற்கும் வாய்ப்பையும் இழந்துள் ளனர். இறுதியில் சாதாரண பொது மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்பதை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பாடசாலைகள் இன்று இயங்குமாம்!

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

கொழும்பு, ஜூலை 09

நாட்டிலுள்ள அனைத்து அரச பாடசாலைகளிலும் இன்று செவ்வாய்க்கிழமை வழமைபோல் கல்வி நடவடிக்கை இடம்பெறும் என்று கல்வி அமைச்சு விசேட அறிக்கையொன்றின் ஊடாக நேற்று அறிவித்தது.

அதிபர், ஆசிரியர்கள் இன்று சுகவீன விடுமுறையில் ஈடுபடுவதாக அறிவித்துள்ள நிலையிலேயே கல்வி அமைச்சு இவ்வாறு அறிவித்துள்ளது. (அ)

# கிளிநொச்சியில் கட்டப்படும் சீனாவின் பொருத்து வீடுகள்!

## 8 பார ஊர்திகளில் பொருள்கள் வந்தன

கிளிநொச்சி, ஜூலை 09

**பொருத்து வீட்டுத்திட்டத்தின் வீடுகள் அமைப்பதற்காகப் பொருட்கள் கிளிநொச்சியை வந்தடைந்தன.**

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சீன அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள பொருத்து வீட்டுத் திட்டத்தின் வீடுகளை அமைப்பதற்காக பொருட்களே கிளிநொச்சியை வந்தடைந்தன.

எட்டு பார ஊர்திகளில் பொருத்து வீடுகளுக்கான பொருட்கள் கிளிநொச்சிக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

குறித்த பொருத்து வீடுகளைக் கொண்ட பார ஊர்திகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பார்வையிட்டார்.



கிளிநொச்சி மாவட்டத்தில் 64 வீடுகள் இவ்வாறு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அதிபர், ஆசிரியர்கள் இன்று போராட்டம்!

கொழும்பு, ஜூலை 09

அதிபர், ஆசிரியர் சங்கத்தினால் இன்று போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

போராட்டம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவிக்கையில்-

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும், கல்வி சுமையை பெற்றோர்கள் மீது சுமத்துவதை நிறுத்தி இதற்கான முழு பொறுப்பையும் அரசு பொறுப்பேற்க வேண்டும், ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் அடக்குமுறைச் செயற்பாடுகள், அத்துடன் அச்சுறுத்தும் அறிக்கைகளுக்கு எதிர்ப்பை தெரிவிக்கும் வகையிலேயே இன்று அனைத்து அதிபர், ஆசிரியர்களும் சுகவீன விடுமுறையை அறிவித்துவிட்டு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அதுமட்டுமல்லாது அழகியல் பாட செயல்முறை பரீட்சையில் ஈடுபடவிருக்கும் ஆசிரியர்கள் அந்த பரீட்சைப் பணிகளில் ஈடுபடுவார்கள். போராட்டத்தில் கலந்துகொள்ளமாட்டார்கள்.

நியாயமான காரணங்களுக்காக நாங்கள் மேற்கொண்டு வரும் இந்த போராட்டங்களுக்கு ஜனாதிபதி ஒரு முடிவை வழங்காது, தான்தோன்றித் தனமாக சில கருத்துக்களை முன்வைத்து, வடக்கு-கிழக்கு மற்றும் தெற்கிலுள்ள ஆசிரியர்களை பிரித்தாளும் தந்திரத்திலேயே ஈடுபடுகிறார்.

எனவே இந்த செயல்பாடுகளை கண்டித்தே இன்று இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது-என்றார். (அ)

# மனைவி, இரு பிள்ளைகளை வவுனியாவில் காணவில்லை

## கணவர் பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஜூலை 09

வவுனியா, கோவில்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த இளம் மனைவி ஒருவரையும் அவரது இரு பிள்ளைகளையும் காணவில்லை என கணவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, கோவில்புதுக்குளம் பகுதியில் வசித்து வந்த குடும்பம் ஒன்றில் 32 வயதான அ.அபிராமி என்னும் பெயருடைய தனது மனைவி, பிள்ளைகளான கம்சனா (வயது-11), சன்சிகன் (வயது-8) ஆகிய இருவரையும் கடந்த வியாழக்கிழமை பாடசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

எனினும், குறித்த இரு மாணவர்களும் பாடசாலைக்குச் செல்லவில்லை என்றும், மனைவியும் வீடு திரும்பவில்லை என்றும், தானும், உறவினர்களும் பல இடங்களிலும் தேடிய நிலையில் அவர்கள் மூவரும் வீடு திரும்பவில்லை எனவும் கணவன் தெரிவித்தார்.

இதனையடுத்து, மனைவியையும், இரு பிள்ளைகளையும் காணவில்லை என கணவர், வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பான தகவல் கிடைத்தால் 0765273860 என்னும் தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது வவுனியா பொலிஸாருக்கோ தெரியப்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது. (அ)

# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கினால் வற் வரி 21 வீதமாகும்!

கொழும்பு, ஜூலை 09

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசு ஊழியர்கள் கோரும் சம்பள உயர்வை வழங்கினால், தற்போதுள்ள 18 வீத வற் வரியை 20 வீதம் முதல் 21 வீதம் வரை உயர்த்த நேரிடும் எனவும் பொதுமக்களை நசுக்கி இது போன்ற கோரிக்கையை அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாது எனவும் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார்.

அரச சேவை தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். (அ)

# அணிசேரா நாடாகவே இலங்கை தொடரும்!

## அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, ஜூலை 09

இலங்கை அணிசேரா நாடு என்ற கொள்கையை, தொடர்ந்தும் உறுதியாகக் கடைப்பிடிப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மீண்டும் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இலங்கை மேற்கு, கிழக்கு என எந்தவொரு பக்கங்களையும் ஏற்காது. சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தோ பசிபிக் வலயத்தில் அதிகாரத்திற்காகப் போட்டியிடுகின்றன.

இதன்போது, நாட்டுக்கும் வலயத்திற்கும் ஏற்றவாறான சரியான முடிவை இலங்கை எடுக்கும் என அமைச்சர் அலி சப்ரி கூறினார். (அ)

# இரசாயன கழிவுகளை அகற்ற 5 மில்லியன் டொலர் நிதியுதவி

கொழும்பு, ஜூலை 09

இலங்கையில் இரசாயன கழிவுகளை அகற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சுற்றாடல் அமைச்சுக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்திற்கும் 5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை உலகளாவிய சுற்றாடல் வசதிகள் நிதியம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சியான இயற்கை மாசுபடுத்திகள் அல்லது பாதரசம் கொண்ட பொருட்களை இலங்கை உற்பத்தி செய்வதில்லை என்ற போதிலும் இந்த வகையான உள்ளீடுகளைக் கொண்ட பல பொருட்கள், ஒவ்வொரு ஆண்டும், பல்வேறு பயன்பாடுகளுக்காக, நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன.

கடுமையான விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டபோதிலும், இந்த ஒழுங்குமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் திறன் இல்லாமையால் இரசாயன இறக்குமதிகள் தொடர்ந்தும் தவறாக நிர்வகிக்கப்படுவதாக இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுப் போக்குவரத்து பயணச் சீட்டுக்களை டிஜிற்றல் மயமாக்குவதற்கு அரசு நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 09

இவ்வருட இறுதிக்குள் ரயில்வே உள்ளிட்ட பொதுப் போக்குவரத்துக்களின் பயணச் சீட்டுகளுக்கான டிஜிற்றல் விநியோக முறையொன்றினை அறிமுகப்படுத்தவுள்ளதாகபோக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.